உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி–௪௩.] விய-௵ ஐப்பசி-மீ [பகுதி. ௧௨.

Vol. 43. October—November 1946. No. 12.

உள்ளுறை.

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:— } அநுபந்தம்.
மதிப்புரை:— ... ... }

ஒருதுறைக்கோவையாராய்ச்சி:— } T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். ௨௨௫-௨௨௮

நகைச்சுவையும் தமிழிலக்கியமும்:— } திரு. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A., (Hons.) B.O.L. ௨௨௯-௨௩௧

நூற்றெட்டுத்திருப்பதிப் பாடல்கள்:— } திரு. வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள். ௨௩௨-௨௩௪

பண்டைமக்களின் பொது இருப்பிடம்:— } சுவாமி ஞாநப்பிரகாசரவர்கள் நல்லூர். ௨௩௫-௨௩௮

செந்தமிழ் ௪௩-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன:— 1—6

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:-(அட்டையின் பின்பக்கம்

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1946.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

1946-ஆம் ௵ அக்டோபர் ௴ 21௳ (விய ௵ ஐப்பசி ௴ 5௳ மாலை 3-மணிக்கு மதுரை தல்லாகுளத்தில் இராமநாதபுரம் மஹாராஜா அவர்கள் பங்களாவிற் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதிமஹாராஜா அவர்கள்
—அக்கிராசனாதிபதி.

2. மகா-ா-ா-ஸ்ரீ. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B A., B.L.
உப-அக்கிராசனாதிபதி.

3. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்.

4. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் M.A., B.L.
—கூட்டுக்காரியதரிசி.

5. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. 1946-௵ செப்டம்பர்மாதத்துச் சங்கமாபீசு வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2. இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிக் கடிதம் எழுதியுள்ள சிலோன் பண்டித. S. அருளம்பலம் என்பவரை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்விஷயம் பின்னால் ஆலோசித்துக்கொள்ளலாமென்று தள்ளிவைக்கலாயிற்று.

3. தமிழும் தமிழ்க்கலைகளும் செழித்து வளர்ச்சியடையும்படி நீண்டகாலம் உழைத்து அரியசேவைபுரிந்த வெள்ளகால் ராவ்ஸாஹிப். V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள் காலஞ்சென்றதனால் தமிழர்களுக்கேற்பட்ட பெரிய நஷ்டத்தைக்குறித்துச் சங்கக் காரியநிர்வாகசபையார் அநுதாபமுற்று ரிக்கார்டில் பதிவுசெய்தனர்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
21—10—'46.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.

அநுபந்தம்

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற நாற்பத்துமூன்றுவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு 43-ஆம் தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, 44-ஆம் தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது வியஹஸ மார்கழிமீ 15உக்குள் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப் பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்து வரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

அரசாங்கத்தார் வெளியிட்ட காகிதக்கட்டுப்பாட்டுத்தரவால் செந்தமிழ் பழையபக்கஅளவிற் குறைந்து வெளிவருகிறது. சந்தா நேயர்கள் பக்கக்குறைவைப் பொருட்படுத்தாது, வழக்கப்படி செந்தமிழை ஆதரித்துவரவேண்டுகிறோம்.

குறிப்பு :— 44-ஆம்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது வியஹஸ மார்கழிமீ 10உக்குள் இச் சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வராவிட்டால் 44-ஆம் தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பிவிடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயைசெய்து வி. பி. யைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

5—12—46.
மதுரை.

லக்ஷ்மீநாராயணன், மானேஜர்.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ:

மதிப்புரை

[காங்கிரஸின் 60-ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக மதுரமித்திரன் தீபாவளிமலர்:—விலை ரூபா 1—8—0. கிடைக்குமிடம்:—மானேஜர், மதுரமித்திரன், நாயக்கர்புதுத்தெரு, மதுரை]

மதுரமித்திரன், தென்னாட்டுத் தமிழ்வாரப்பத்திரிகைகளுள் முன்னெண்ணத்தக்கது; சிறந்த தமிழிலக்கியக்கட்டுரைகளாலும் சிறுகதைகளாலும் அரசியலும் உலகியலும்பற்றிய விசேடக்கட்டுரைகளாலும் ஒழுக்கநெறி, தொழில், வீரம் விஞ்ஞானம் சிற்பம் முதலிய பொருள்பற்றிய ஆராய்ச்சியுரைகளாலும் மொழித்தொண்டும் நாட்டுத்தொண்டும் நன்குபுரிந்து பல ஆண்டுகளாகத் தமிழகத்தை மகிழ்வூட்டிவருவது. இதன் ஆசிரியர் திரு. ந. சுப்பிரமணியம் அவர்கள், சிறந்த தேசத்தொண்டர்; தமிழ்த்தொண்டர்; தமிழறிவோடு தமிழ்ப்பற்றும், உலகியலறிவோடு அரசியலறிவும், ஊக்கமும் ஒழியாமுயற்சியும் உயர்குணங்களும் உடையவர். இவரது நன்முயற்சியால் வெளிவந்த மதுரமித்திரன் தீபாவளிமலர், காங்கிரஸின் 60-ஆம் ஆண்டு ஞாபகார்த்தவெளியீடு என்பதற்கேற்ற பல சீரியகட்டுரைகளையும், தம் உடல் பொருள் ஆவி யனைத்தினையும் காங்கிரஸின் வளர்ச்சிக்கே உதவிய தலைவர்கள் முதலியோருடைய உருவப்படங்களையும் உடையதாய் விளங்குகிறது. இம்மலரிற் காணப்படும் ஒவ்வொருகட்டுரையும் கதையும் அரிய பொருள்பொதிந்தனவாயும் இனிதுவிளங்குவனவாயும் படிப்பார்க்குச் சலிப்பின்றி மகிழ்ச்சிவிளைப்பனவாயும் உள்ளன. இம்மலரை வெளியிட்டுதவிய ஆசிரியர் பாராட்டற்குரியர். மதுரமித்திரன் மேலும் மேலும் சிறந்து, நீங்காத மணமும் அழியாத அழகும் குன்றாத தேனும் உடைய நாண்மலர்வெளியீடுகளால் உலகுக்குப் பயனுதவி நெடிதுவாழும்வண்ணம் அதனைத் தமிழ்மக்கள் பல்லாற்றானும் ஆதரிப்பார்களென்றுநம்புகிறோம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௩.] விய-ஷு ஐப்பசி-மீ [பகுதி- ௧௨.

Vol. 43. October—November 1946. No. 12.

ஒருதுறைக்கோவையாராய்ச்சி

[௧௮௭-ஆம்பக்கத்தொடர்ச்சி.]

“கோசிக மத்த மணிசூறை யிட்டெதிர் கூடலர்தம்
பாசறை யிட்ட ரகுநாதசேதுபதி”

என்பது, இக்கோவையின் உரைப்பதிப்புள் 186-ஆம் பாட்டில் பாட்டுடைத்தலைவன்பெருமைகூறும் முற்பகுதியாகும். இதனுள் ‘பாசறையிட்ட’ என்பது, சங்கத்துள்ளதோ ரேட்டுப்பிரதியிலே ‘பாசறையட்ட’ என்று காணப்படுகிறது. இவற்றுள் அமைவுடையது எது? என்பது பின்வருமாற்றான் விளங்கும்.

உரையாசிரியர், ‘பாசறையிட்ட’ என்ற பாடங்கொண்டு, மேற்குறித்த அடிகளுக்கு,

“கோசிகம் - பட்டாடைகளையும், அத்தம் - திரவியங்களையும், மணி - ரத்நங்களையும், சூறையிட்டு - கொள்ளையிட்டு, எதிர் -
எதிரில்வந்து, கூடலர்தம் - பொருந்ாதவராகிய பகைவரது, பாச
றையிட்ட - படைவீட்டிலிட்ட - ரகுநாதசேதுபதி”

என்று பொருள் வரைந்துள்ளார்.

இவ்வுரையுட்கண்டவாறு கோசிகம் முதலியவற்றைக் கொள்ளையிட்டுப் பகைவரது படைவீட்டிலிட்ட ரகுநாதன் என்பது

பாட்டுடைத்தலைவன் பெருமைகூறியதாகாது. ஆதலால் 'பாசறை யிட்ட' என்ற பாடமும் அதற்கிசைய மேற்குறித்தவுரையும் அமைவுடையவாகாமை பெறப்படும்.

இனி, 'பாசறையட்ட' என்று சங்கத்து ஏட்டுப்பிரதியிற்கண்ட பாடங்கொண்டு நோக்குமிடத்து மேற்குறித்த செய்யுளடிகள்,

'தன்னொடு மாறுபட்டு எதிர்ந்த பகைவருடைய பட்டாடை களையும், பொருள்களையும் இரத்தினங்களையும் கொள்ளையிட்டு, (அப்பகைவருடைய) படைவீட்டையும் அழித்த இரகுநாதசேது பதி' என்று இனிது பொருள்பயந்து பாட்டுடைத்தலைவனது பகைத்திறந்தெறும் போராற்றல்கூறிச் சிறந்துநிற்றலின், 'பாசறை யட்ட' என்று பாடங்கொண்டு பொருளுரைத்தலே அமைவுடைய தாகும்.

"முல்லையலங்கலின் மின்னார் கண் வண்டின மொய்க்கவவாய்ச்
செல்லு மிவுளித்துரை ரகுநாதன்"

என்பது இக்கோவையின் உரைப்பதிப்புள் 245-ஆம் செய்யுளின் நாயகவாசியாகும்.

இதனுள் 'மொய்க்கவவாய்ச்செல்லும்' என்றிருப்பது, சங்கத் துச்சுவடிகளில் 'மோய்க்கவவாச்சேல்லும்' என்று காணப்படுகிறது.

உரைகாரர் 'மொய்க்கவவாய்ச்செல்லும்' என்று பாடங் கொண்டு, மேற்காட்டிய அடிகளுக்கு,

முல்லை அலங்கலின் - முல்லைமாலையையணிந்த, மின்னார் - மாதருடைய கண்வண்டினம் - கண்ணாகியவண்டின்கூட்டம், மொய்க்க - மொய்க்கும்படி, அவாய்ச்செல்லும் - தாவிச்செல்லுகின்ற, இவுளி - குதிரைப்பவனிவருகின்ற, துரை - பிரபுவாகிய ரகுநாதன்"

என்று பொருள்வரைந்துள்ளார்.

அவாய் என்பதற்கு விரும்பி என்று பொருள்கொள்வதல்லது, இவ்வுரையிலுள்ளபடி 'தாவி' என்று பொருள்கோடல் அமையாது. அன்றியும், 'முல்லையலங்கல்' என்பதனை மின்னார்க்கு அடையாக்கி, 'முல்லையலங்கலின்மின்னார்' என்றுகொண்டு 'முல்லைமாலையை

பணிந்த மாதர்' என்று பொருளுரைத்ததும் அமைவுடையதாயில்லை. பாட்டுடைத்தலைவன் பவனிவருங்கால் அவனைக் காணவரும் மாதர் முல்லைமாலையணிந்தவராகவேயிருத்தல் இயல்பாகாது. அவ்வாறேயிருக்கவேண்டுமென்ற வரையறையும் யாண்டும் கண்டதில்லை. 'முல்லைமாலையணிந்தமின்னார்' என்றே வைத்துக்கொண்டாலும் அவர்கள்கண்களாகியவண்டுகள் யாண்டுமொய்த்தன என்பது பெறுமாறில்லை.

எனவே உரைகாரர்கொண்ட பாடமும் வரைந்தபொருளும் இயைபுடையவாயில்லை யென்பது விளங்கும். சங்கத்துச்சுவடியிற் கண்ட "மொய்க்கவவாச்செல்லும்" என்பதும் பொருளமைதியுடையதாயில்லை.

ஆதலால் மேற்குறித்த அடிகளுள், மொய்க்க......செல்லும், என்ற பகுதியின் உண்மையுருவமும், அவ்வடிகளுக்கு நேரான பொருளும் ஆராய்ந்துகாண்டல் அவசியமாகும்.

இனி அவ்வடிகளின் நலல்பொருளை ஆராயவே குறித்த பகுதியின் உண்மையுருவமும் எளிது புலனாவதாம்.

பாட்டுடைத்தலைவன் இரகுநாதன் என்பது வெளிப்படை. மேற்குறித்த அடிகளுள் முல்லையலங்கல் எனவே அவன் தாரும், 'செல்லும் இவுளித்துரை' யெனவே அவன் பரியிவர்ந்துசெல்லுஞ் செலவும் பெறப்படும். அச்செலவுதான் யாது? எனின், மூலத்துள்ள 'அவாய்ச்சேல்லும், 'அவாச்சேல்லும்' என்பவை பொருந்தாமையின் 'உலாச்செல்லும்' என்று கொள்ளுதல் அமையும். கொள்ளவெ அவன் செலவு, உலாச்சேலவு என்பது விளங்கும். எனவே,

> "முல்லையலங்கலின் மின்னார்கண் வண்டின மொய்க்கவுலாச்
> செல்லுமிவுளித்துரை ரகுநாதன்"

என்று நாயகவாசியும்,

'மின்னார்கண்வண்டினம் - மகளிர்கண்களாகிய வண்டின்கூட்டம், முல்லை அலங்கலில் மொய்க்க (தன்தோளிலணிந்த) முல்லைமாலையின்கண் மொய்க்கும்படி, இவுளி - பரியின்கண் (இவர்ந்து), உலாச்சேல்லும் - பவனி வருகின்ற, துரை - அரசனுகிய—இரகுநாதன்'

என்று பொருளும் கொள்ளல் அமைவுடையதாதல் பெறப்படும்.

பாட்டுடைத்தலைவன்மாலை முல்லைமாலையென்பது,

'தேனார் மணமுல்லைவெண்டாரும் பைந்தமிழ்ச் செந்தொடையும்
தானார் தடம்புயத்தான் ரகுநாதன்'

என இந்நூலின் 4ம் செய்யுளில் ஆசிரியரே கூறுதலால் அறியலாம். 'மின்னார்கண்வண்டினம் முல்லையலங்கலின்மொய்க்க இவுளியிவர்ந்து உலாச்செல்லும் துரை' என்றமையால், ரகுநாதன் பவனிவருங்கால் அவனைக்கண்ட மகளிர் அவன்பாற் காதன்மிக்கு அவன் தோளிலணிந்த முல்லைமாலையைவேட்டு அதனையேநோக்கிநின்றமை கூறியதாகும். 'மின்னார்கண் வண்டினம் முல்லையலங்கலின் மொய்க்க' என்று கொள்வதே ஆசிரியர்க்கும் கருத்தென்பது மகளிர்கண்களை அவர் வண்டுகளாக உருவகித்ததுகொண்டு அறியலாம்.

இன்னும், இக்கோவைப் பாட்டுடைத்தலைவன் நாடு சேதுநாடு என்பது பிரசித்தம். அந்நாட்டைக்குறிக்குமிடத்து ஆசிரியர் சேது நாடு, வைகைநாடு செம்பிநாடு என்று கூறிச்செல்வர். இதனால் சேதுநாட்டுக்குச் செம்பி, செம்பிநாடு என்ற பெயரும் உண்டென்பது பெறப்படும். அங்ஙனமிருக்கவும், இந்நூலுள் செம்பி, செம்பி நாடு எனச் சேதுநாட்டைச்சுட்டிய பல இடங்களிலும், செம்பியர் எனச் சேதுநாட்டுக்குடிகளைச்சுட்டிய இடங்களிலும், செம்பியர் தோன்றல், செம்பியர்கோ, செம்பியர்கோன், செம்பிக்கோன், செம்பி நாடன், செம்பிநாட்டிறை: என்று பாட்டுடைத்தலைவனாகிய சேது வேந்தனைச்சுட்டிய பல இடங்களிலும் உரையாசிரியர் முறையே சோழநாடு, சோழநாட்டார், சோழநாட்டரசு என்று பொருளுரைத்துச்சென்றிருப்பது பொருந்தாததாயிருக்கிறது. இவற்றையும் இன்னோரன்ன பிறவற்றையும் ஏற்றபெற்றி திருத்திக்கொள்ளல் தகும்.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

நகைச்சுவையும் தமிழிலக்கியமும்

பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம்அவர்கள் B A. (Hons.) B.O.L.,
விரிவுரையாளர் அரசினர் ஆங்கில ஆசிரியகலாசாலை, கொழும்பு.

[௧௭௨-ஆம்பக்கத் தொடர்ச்சி]

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பருடைய இராமாயணத்திற் பல இடங்களில் நகைச்சுவை காணப்படுகிறது. உதாரணமாக ஒன்றை மாத்திரம் குறிப்பிடுகின்றேன்.

ஒருகொடியில் இருவகையான பூக்கள் இயல்பாய்ப் பூப்பதில்லை யென்பது யாவரும் அறிந்ததொன்று. ஒருகொடியில் இரண்டு வகையான பூக்கள்—வெவ்வேறு நிறங்களைக்கொண்டவைகள்—பூத்திருக்கின்றன. இக்காட்சி யாரைத்தான் அதிசயிக்கச்செய்யாது!. எங்கே புதுமைகாணலாம் என்று அலைந்துதிரிபவர்கள் இதனைக்கண்டால் விட்டுவிட்டுப்போவார்களா?

"நதியினுங் குளத்தும் பூவா நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மழலைத் தும்பி
அதிசய மெய்திப் புக்கு வீழ்ந்தன அலைக்கப் போகா
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்"

என்று கம்பர் தீட்டியிருக்கும் சித்திரத்தை அகக்கண்ணாற் கண்டவுடன் நகைக்காமல் இருக்கமுடியுமா? பெண்களுடைய கை, தனம் முதலியவுறுப்புக்களையும் கண்களையும் முறையே தாமரை, குவளை மலரெனக்கருதி ஒரு கொடியில் இவை எவ்வாறு பூத்தன? என்று அதிசயமெய்தி அவற்றில் வண்டுகள் படிகின்றன. அலைத்தாலும் செல்ல மறுக்கின்றன. ஏன்? "புதியன கண்டபோழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்" என்று கம்பர் காரணம் கற்பித்துச் செல்லுகின்றார். வண்டுகளைக் குறித்துப் பேசுமிடத்தில் உலகத்திலுள்ள 'வம்பர்'களுக்கும் ஒரு சூடுபோடுகிறார்.

இங்கே நளவெண்பாவிற் புகழேந்திப்புலவர்கூறியசெய்தியொன்று ஞாபகத்திற்குவருகின்றது.

பெண்ணொருத்தி சோலையிற் பூப்பறிக்கிறாள். அவளுடைய முகத்தைத் தாமரையென்று எண்ணி வண்டு அதில் மொய்க்கிறது. அவள் உடனே தன் கையால் ஓட்டுகிறாள். வண்டு அஞ்சியகல்கிறதா? இல்லை. அவளுடைய கையைக் காந்தள் மலரென்றுநினைத்து அதிலும் பாய்கிறது. அவளுக்கு அச்சத்தினால் வேர்த்துவிட்டது. இந்நிகழ்ச்சியைத் தமயந்திக்கு நளமகாராசன் காட்டுகிறான்.

"மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—செங்கையாற்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து"

என்னும் பாடலைப் படித்துப்பாருங்கள்.

தமிழ்ப்புலவர்களில் ஔவையாருக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஏன்? தமிழ்மொழிக்கே ஔவையாரால் ஒரு தனிப் பெருமையுண்டு. ஔவையாரைப்போன்ற ஒரு பெண்பாற்புலவரை மற்றைமொழிகள் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. மக்களை நல்வழிப்படுத்த ஔவையார் நன்குமுயன்றவரானாலும் நகைச்சுவையையும் அவர் மறந்துவிடவில்லையென்பது, புறநானூற்றுள் "இவ்வே பீலியணிந்து" என்று தொடங்கும் 95-ஆம் பாடல் முதலியவற்றால் விளங்கும்.

நகைச்சுவை நிறைந்த தனிப்பாடல்களைப் பாடிய புலவர்களுள்ளே தலைமையிடம்பெற்றுவிளங்குபவர் காளமேகப்புலவராவர். வசைப்பாட்டுக்களில் நகைச்சுவையைத் திணித்துப்பாடியாவருடைய மதிப்புக்கும் வியப்புக்கும் உரியவராக அவர் மிளிர்கின்றார். 'வசைபாடக் காளமேகம்' எனும் புகழுரை தமிழ்நாட்டில் நன்கு நிலைத்துவிட்டது. "ஆசுகவியால் அகில வுலகெங்கும் வீசு புகழ்க் காளமேகமே" என்று இரட்டைப்புலவர்கள் அவருடைய

ஆசுகவித்திறனைப் போற்றினார்கள். நகைச்சுவைக்கும் வசைப் பாட்டுக்கும் ஆசுகவிக்கும் அரசாகவிளங்கிய அப்புலவருடைய பாடல்களுள் ஒன்றை ஈண்டுக் காண்போம்.

முற்காலத்திலிருந்த தாசிகள் ஆடல் பாடல்களில் மிகச்சிறந்து விளங்கினர். அவர்களுடைய அழகும் ஆடலும் கம்பர் காளிதாசர் போன்ற புலவர்களைக்கூடக் கவர்ந்தன என்பர். ஆற்றூர் எனும் ஊரிலே சோமி என்று ஒரு தாசி இருந்தாள். அவளழகைக்கண்டு,

"ஆராயு முத்தமிழ் ஆற்றூரிற் சோமி அழகுகண்டு
நாராயணன் நெடுமாலாயினன் அந்த நான்முகனும்
ஓராயிரமடல் ஊர்ந்தான் வின்மாரன் உருவழிந்தான்
பேரான வானவர் கோனுங்கண் ஆயிரம் பெற்றனனே"

என்று வியந்தார் காளமேகப்புலவர். அவளுடைய அழகில் ஈடுபட்டதால் விஷ்ணு மயக்கமடைந்தான்; பிரமன் ஆயிரம் மடலேறினன்; மன்மதன் தன்னுருவிழந்து அநங்கனாயினன்; இந்திரன் ஆயிரங் கண் பெற்றான். இவர்களையெல்லாம் இவ்வாறு விகாரமடையச் செய்தது அவள் அழகு எனில் அஃது எத்தகையதாயிருக்கும். திருமாலுக்குரிய 'மால்' எனும் பெயரையும், பிரமன் ஆயிரம் இதழையுடைய தாமரையிலிருத்தலையும், மன்மதன் உருவிழந்த செய்தியையும், சாபத்தால் இந்திரன் பெற்ற ஆயிரங்கண்களையும் புலவர் சோமியின் அழகால் நிகழ்ந்ததென்ற விசித்திரம் யாவராலும் போற்றப்படத்தக்கதன்றோ!

நந்திக்கலம்பகத்துள் ஒரு பெண், பாணன் ஒருவனுக்கு அவன் பாட்டைக் கேட்ட பலருடைய அபிப்பிராயங்களைக் கூறுவதாக வுள்ள,

"ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்
பேயென்றாள் அன்னை பிறர்நரியென்றார் தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்"

என்னும் பாடலிற் கவி நகைச்சுவையமைத்திருக்குந் திறம் மகிழ்ச்சிவிளைக்கின்றது.

ஸ்ரீ:

நூற்றெட்டுத்திருப்பதிப்பாடல்கள்

:(o):

ஸேதுஸமஸ்தான மஹாவித்வான், பாஷாகவிசேகரர்,

ரா. இராகவையங்காரவர்கள் இயற்றியவை.

[மஹாவித்துவான் வாக்குநயம் முதலியவை தமிழுலகம் நன்கறிந்தவை. அவர் இயற்றியவற்றுள் அச்சில் வாராதன பல. அவற்றுள் இந்நூற்றெட்டுத்திருப்பதிப்பாடல்கள், திருமால்திருப்பதி நூற்றெட்டுள் இன்ன இன்ன நாட்டுள் இத்தனையித்தனை திருப்பதிகள் உளவென்று அவற்றின் பெயர்களை அழகுறத்தொடுத்து விளக்குவன. சந்த அமைதியுடைய இச்செய்யுள்கள், திருமால் திருப்பதிகளை அடிக்கடி நினைவுகூர்வார்க்கும் அறிய விரும்புவோர்க்கும் பயன்படுமென்று, மஹாவித்வானவர்கள் குமாரர் வித்வான் ஸ்ரீ. ரா. இராமாநுஜையங்காரவர்கள் எழுதியனுப்பியபடி இங்கே வெளியிடலாயிற்று. ப-ர்.]

திருமால்நிலை

நித்தர் முத்தர் தொழற்குவை குந்தத்தி
　　னீடி ருக்கும்ப ராபரன் ஞானியர்
சித்தம் வைக்கவி யூகமெ டுத்தெங்குந்
　　திகழ்வ னாகிய றத்திற்க வதரித்
தத்தி விக்கனு ளார்தொழப் பாற்கட
　　லங்க னுற்றனை வர்க்குந்தொ ழற்கென
இத்தரைக்கட் டிருப்பதி நூற்றெட்டி
　　லெழில ருட்ட்டி வங்கொண்டி ருக்குமே. (1)

சோணாட்டுத்திருப்பதிகள்—40.

தேவாதியர் தொழவாவல்கொள் பூலோகவை குந்தம்
　　திருமால்வரு குடகாவிரி நடுவேவளர் கோயிற்
சீரின்பவ ரங்கம்முறை யூரன்பில்கு டந்தை
　　தேருத்தம னூர்வெள்ளறை பேர்நற்சிறு புலியூர்
பூவாழ்திரு நறையூர்புகழ் மாவாலிமெய் நந்தி
　　புரவிண்ணகர் சேறைகண புரவிண்ணகர் புள்ளம்
பூதக்குடி திருவிந்தளூர் மாதஞ்சைய ழுந்தூர்
　　பொன்னுண்மதி யக்கண்டியூர் தென்னுகைவண் புருடம்

கோவாதனூ ராற்றங்கரை தேவார்திரு வெளியங்
குடிவாழ்கண மங்கைகண்ணங் குடிகாழிவெல் சித்ர
கூடந்திரு நாங்கூர்மணி மாடந்திரு வெள்ளக்
குளங்கூடல்வை குந்தம்மரி வளங்கூடு விண்ணகரம்
தாவாதொளிர் திருத்தெற்றியம் பலஞ்செம்பொன்செய் கோயில்
தளிக்காவளம் பாடிப்பதி யொளிக்காமணிக் கூடம்
தருத்தேன்வழி பார்த்தன்பள்ளி திருத்தேவனூர் தொகையித்
தலமீரிரு பதுஞ்சோழர் தரைத்தெய்வத நிலனே. (2)

பாண்டிநாட்டுத்திருப்பதிகள்—18.

திரமுயர் கூடல்கு றுங்குடி பேரை
சீவர மங்கைமெய் யம்மலை கோளூர்
வரகுண மங்கைதண் கால்குரு கூர்கன்
மாலிருஞ் சோலைபு லாணிகு ளந்தை
சுரர்திகழ் கோட்டிபு ளிங்குடி மோகூர்
தொலைவிலி மங்கலம் புதுவைவை குந்தம்
பரவுபெ ரும்புகழ் விஞ்சிய பாண்டிப்
பைந்தமிழ் நாட்டுப் பதிபதி னெட்டே. (3)

சேரநாட்டுத்திருப்பதிகள்—13.

கருவூர்வித் துவக்கோடு கடித்தானம் மூழிக்
களமாறன் விளைதிருவண் பரிசார நாவாய்
திருவாழு மனந்தபுரந் திகழ்குட்ட நாட்டுத்
திருப்புலியூர் வாட்டாறு திருச்செங்குன் றூர்கோள்
மருவாத திருவல்ல வாழ்திருவண் வண்டூர்
வாய்ந்ததிருக் காட்கரையென் றுய்ந்த பதின்மூன்றும்
அருகாத புகழ்படைத்த கொடைச்சேரர் நாட்டி
லரும்பெரிய கடவுள்வளர் பெரும்பதிக ளாமே. (4)

நடுநாட்டுத்திருப்பதிகள்—2.

நெடுமா லயிந்தை
யொடுகோவ லூரை
முடிசூடு மலையன்
நடுநாடு கொளுமே. (5)

தொண்டைநாட்டுத்திருப்பதிகள்—24.

ஊரக மட்டபுயகர மத்தி
    யூர்கச்சி வேளுக்கை பாடகந் தண்கா
நீரகம் புட்குழி நீர்மலை வெஃகா
    நின்றவூ ரெவ்வு ளிலாத்திங்கட் டுண்டம்
காரக மிடவெந்தை கள்வனூர் கடிகை
    கடன்மல்லை திருவல்லிக் கேணிகார் வானம்
வார்பர மேச்சுர விண்ணகர் பவள
    வண்ணநல் வேங்கடந் தொண்டையெண் மூன்றே. (6)

வடநாட்டுத்திருப்பதிகள்—11.

பரவு மிமையப் பொருப்பிற் பிருதி
    பதரிது வாரகை நைமிசா ரண்யம்
கருதும யோத்திவி ருந்தாவ னந்தான்
    கங்கைக்க ரைக்கண்டம் சிங்கவேள் குன்றம்
பொருவருங் கண்ணன் பொருந்தாயர் பாடி
    பொன்திகழ் சாளக்கி ராமம்ம துரை
மருவிய சீர்வட நாட்டினிற் றெய்வம்
    வளர்பெருங் கோயில்கள் வாழ்பதி னொன்றே. (7)

ஆக்கியோன்பெயர்.

ஒருசோழர் வளநாட்டி லுயர்நாற்ப தூர்கள்
    ஒளிர்பாண்டி வளநாட்டி லூரீரொன் பதுதாம்
தருசேரர் பெருநாட்டிற் பதின்மூன்று தலங்கள்
    தனியாய நடுநாட்டிற் றலமொன்றொ டொன்று
வருபாலி வளர்தொண்டை. வளநாட்டெண் மூன்றூர்
    வடநாட்டிற் பதினொன்றென் றொருநூற்றொ டெட்டும்
திருவாரு மணிமார்பன் திருக்கோயி லென்று
    தெளிநூலின் வழிராக வனிதோதி னனே. (8)

பயன்

உண்ட முதல்வ னுயரருளே யூற்றெடுத்து
மண்டி வழிந்ததென வண்பெரியார்—விண்ட
திருப்பாடல் பெற்ற திருப்பதிநூற் றெட்டும்
விருப்பாயி னர்பெறுவர் வீடு. (9)

பண்டைமக்களின் பொது இருப்பிடம்

[சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.]

[உoc-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

இனி, எவ்வுயிர்க்கும் இன்றியமையாத பூதியமாகிய காற்றின் ஆதிப் பெயரைப் பார்ப்போம். காற்று ஊதுவதினின்று அதற்கு ஊதை எனும் பழம்பெயர் தமிழில் உண்டாயிற்று. ஊதை (முன்னைய உருவம்: ஊத) இன்றைக்குப் பாவைவழக்கில் இறந்துபோயிருப்பினும், அதிலிருந்து ககர முதன்மெய்பெற்றுப் பிறந்த கூதல் எனும் சொல்லும், கூதிர்காலம் எனும் தொடரும் வழங்குகின்றன. ஊதையோடு ஒத்த சொற்களை வடமொழி வாதஸ் (vatas), பாரசிகம் பாத் (bad) என்பவைகளில் வெளிப்படக் காணலாம். ஊ எனும் சத்தம் வா எனப் பலகால் மருவிவருவது சொற்கலைக்கு உடன்பாடு. ஊது எனும் தமிழ்ச்சொல் உந்து (தள்ளு) என்பதினின்று வருவது. இதை நாம் மனதில் வைத்துக்கொள்ளின், ஊதை லத்தீனில் வெந்துஸ் (ventus) என்றிருந்தல் ஏன் என்பது புலனாகும். இச்சொல்லே சர்மனியத்தில் வின்ற் (wint) எனவும் ஐரிஷ்மொழியில் விண்டறு (vindr) எனவும், இங்கிலீஷில் உவிண்ட் (wind) எனவும் திரிந்துநிற்கின்றது. கிரேக்கத்தில் அயேத்தேஸ் (aetes) என்றதும் இதுவே என்ப.

காற்றுக்கு ஆதிமக்கள் ஒருங்கேவதிந்தகாலையில் இட்ட பெயரைக் கண்டோம். இனி நீரின் பெயரை ஆராய்வோம். இது பழந்தமிழில் ஓதம் எனப்பட்டது. துவாரத்துள் ஒடிவிழுவது ஓதம். ஓதம் ஓடும் வாய்க்கால் ஓடை. ஓடையில் மிதந்துசெல்வது ஓடம். ஓதம் எனும் சொல், இக்காளில் நம்முள் வெள்ளம் கடல் என்ற பொருளுடன் வழங்க, நீர் எனும் தமிழ்ச் சொல்லே அதனிடத்தை வகித்துக்கொண்டது. மலையாளத்தில் வெள்ளம் எனும் சொல் இன்றைக்கும் நீரைக்குறிக்குமன்றோ? ஆயின் பிற பூர்வ மொழிகளில் ஓதமே இன்றைக்கும் பலவாறு திரிந்து நிலைபெறுகின்றது. வடமொழியில் உதம், உதன், உதகம் என்றவையும் udam, udan, udkam) ஓதமும் ஒன்றெனக்காண்பது எளிது. கொதிக்கத்தில் அது வத்தொ (wats) எனவும், ஆங்கில-சாக்சனியத்தில் உவயெத்தர் (waeter) எனவும், இங்கிலீஷில் உவாட்டர் (water) எனவும் நிற்கும். அதுதான், நகர இடைத்தோன்றலோடு, லத்தீனில் உந்த (unda) எனவும், லிதுவானியத்தில் வந்து (wandu) எனவும் ஆயிற்று. நீருக்கும், சிறப்பாகக் கடலாதிய நீர்நிலைகளுக்கும் பழந்தமிழில் அம், அம்மு அல்லது அம்பு என வேறொரு பெயரும் உண்டு. அமிழ்த்துவது என்றமையால் இப்பெயர் வந்ததுபோலும். இது சுமேரியத்தில் அப் அப்ப (ab, abba) எனப்படும். பழம்ஸம்ஸ்கிருதமும் அப் என வைத்து, பின் பன்மையில், ஆபஸ் (ap, apes) ஆக்கிற்று. லிதுவானிபத்

இல் உபெ(upe) நீரின்பெயர். பழம்பாரசீகத்தில் அபெ (ape) நதிக்குப் பெயர். கிரேக்கத்தில் அப்ரொஸ் aphros) நீரோடை, ஒம்புரொஸ் (ombros) மழை. லத்தீனிலும் இம்பெர் (imber) மழைப்பெயர். இவையெல்லாம் அம் அம்மு அம்பு எனும் உருவங்களோடு ஒத்தபிறப்பு உடையனவே.

நீரைப்போல் நெய்யும் மனிதனுக்கு இன்றியமையாத பொருள்களுள் ஒன்று. இதற்குப் பண்டைக்காலத் தமிழ்ச்சொல் இழுது என்பதாம். இழுபடுவது, நெய்ப்பற்றுள்ளது இழுது. (நெகிழ்வது நெய்) இழுதுச்சொல் எள் எனவும் நின்றதாகத் தோன்றும். இன்றைக்கு நாம் எள் என்று தனித்துச் சொல்லாமல், நெய் எனும் சொல்லோடு சேர்த்து இருபெயரொட்டாக எண்ணெய் என்கிறோம். அப்பால், இழுது தரும் மரம் இலுப்பை (—இழுப்பை). அதினின்றுதான் எள்ளுச்செடியின் பெயரும் என்க. இனி, இழு-து எனும் பண்டைச்சொல் பிற பழம்பாஷைகளில் நிற்பது எவ்வாறு எனில், சுமேரியத்தில் அது தலையுயிர் கெட்டு லி (li) எனப்பட்டது. கிரேக்கத்தில் அதுதான் எலயியொன் (elaion) எனவும், லத்தீனில் ஒலெயும் oleum, for olevum) எனவும், இங்கிலீஷில் ஓயில் (oil) எனவும் வரும். கிரேக்கத்தில் எண்ணெய்மரம் எலயிய எனப்படும். இச்சொல்லின் பண்டையுருவமாகிய எலெயிப (elei [F]a)வும் இலுப்பையும் ஒலியிலும் பொருளிலும் ஒத்திருத்தலை நோக்குக. எண்ணெய்மரத்தின் எல்பொஸ் எல்ப்பொஸ் (elpos, elphos) எனும் மறு நாமங்களும் அவ்வாறே. லத்தீனில் ஒலிவ (oliva) என்றதும் நமது இலுப்பையோடு நன்றாய்ப் பொருந்துகின்றது. கித்திய பாஷையில் நெய்பூசுதலை லிப் (lip) என்பர். இது இலுப்பையின் தலைக்குறையும் கடைக்குறையும் போலும். இவற்றோடு ஸம்ஸ்கிருத ஸர்ப்பிஸ் (sarpis) நெய், சர்மனிய ஸல்ப (salba), கொதிக்க ஸல்பொன் (salbon), இங்கிலீஷ் ஸால்வ் (salve) என்பவற்றை ஒப்பிடுக.

பழக்கியெடுத்த மிருகங்கள்.

இனி, மெசப்பொத்தேமியா எனப் பிற்காலம் பெயரடைந்த செழிப்பான இயுபிறத்திஸ்-திகிரிஸ் பள்ளத்தாக்கிலும், நீலநதிப் பள்ளத்தாக்கிலும் குடிகொண்டிருந்தவர்களே முதன்முதல் மாடு ஆடுகளைப் பழக்கி வளர்த்தவர்கள் என்றது சரித்திர நூலாசிரியர்களுக்கு ஒத்த துணிபு. மாடு ஆடுகளின் பழம்பெயர்கள் யாவை? அவைகள் பழைய மனுக்குலங்களுக்குள் ஒன்றாய் விளங்கினவா? என்பது கேள்வி. சுமேரியருக்குள்ளே மாடு குட் (gud) என அறியப்பட்டது. வளைந்த கொம்பைப் புறப்பாடாய்க் கொண்டதனால் மாட்டுக்கு இப்பெயர் வந்தது என்றமையை அன்னோருடைய சித்திர லிபியில் முன் வளைந்த கொம்புள்ள மாட்டுத்தலையே மாடு எனுஞ்சொல்லின் சித்திரமாகக் குறித்திருத்தலால் அறியலாம். குட் எனும் சொல் கடைகுறைந்து கு எனவும் நின்றது. இந்து-ஐரோப்பிய மொழிகளிற் பெரும்பாலும்

பசுமாட்டின்பெயர் கு என்பதின் திரிபே ஆயிற்று. அது ஸம்ஸ்கிருதத்தில் கோ (go), ஆர்மீனியத்தில் கு (cu), இங்கிலீஷில் கௌ (cow) என வரும். இது கிரேக்கத்தில் பொவுஸ் (bous) என்றும், லத்தீனில் பொஸ் (bos) என்றும் மிகத் திரிந்துநிற்கும். பழந்தமிழிலே குடம் எனும் பசுமாட்டுப்பெயர் சுமேரிய குட் எனுஞ்சொல்லின் விரிவாக அம்விகுதிசேர்ந்து நிற்பது பிரசித்தம். கோடுள்ளது குடம். கோடு—வளைந்த கொம்பு. இதனாலே தான் கொம்பி கொம்பிச்சி எனப் பசுவுக்கு இன்றைக்கும் மலையாளத்திற் பெயரிருக்கின்றது. கூயி எனும் தமிழ்ப் பாகதத்தில் கோடி—பசு. கோடிச் சொல் சிங்களத்தில் கொண (gona) என நின்று எருதைக்குறிக்கும். கன்னடத்தில் கோண எருமைக்கடாவின் பெயர்; (gona) எருதின்பெயர். இவ்வாறாகப் பழந்தமிழிலே குட் பசுவைக் குறித்து நிற்கச் சில உரைகாரர் அதை வேறொரு வளைந்த உருவமுள்ள (திரட்சியான) பொருளாகிய குடம் எனும் கலத்தின்பெயராக மயங்கி, இலக்கியங்களில்வரும் குடஞ்சுட்டு என்ற தொடரை இத்தனைகுடம் பால்தருவது எனும் எண்ணிக்கைக்குரிய பசு என விரித்துப்போயினர். குடஞ்சுட்டு என்பதன் உண்மைக்கருத்து மக்கட்சுட்டு (தொல்காப்பியம்) என்றதிற்போல, குடம் எனும் சொல் குடப் பெயரால் சொல்லப்படுவது என்பதே என அறிக. சுட்டு—சொல்.

ஆதிமக்களின் முக்கிய செல்வமாகிய மாடு, அன்னோருள் அடைந்திருந்த பெயரே இன்றைக்கும் பல விவிதகுலங்களுள் நிலைபெறக்காண்கின்றோம். இவ்வாறே ஆட்டின் பெயருமாம். தமிழில் அதற்குப் பழம்பெயர் எலி என்பது. இதற்கு வெள்ளைநிறமிருகம் என்றது கருத்து. இதனாலன்றோ வெள்ளை என்பது ஆட்டின்பெயராக இன்றைக்கும் நிலைபெற்றிருக்கின்றது. வெள்ளாடு எனும் பெயரையும் காண்க. வெள்ளை அல்லது வெள்ளாடு ஒரு இனம். செவ்வெலி அல்லது செம்மலி (=செம்மறி) என்பது வேறொரு இனம். இச் செம்-எலி (செம்மலி) ஆதியில் கெம் - எலி என்றிருந்தமைக்குப் பழைய பாஷைகளிலெல்லாம் ககரமெய்யை முதலாய்க்கொண்ட சொற்களே தொடக்கத்தில் வழங்கிப் பின் ககரம் சகரமாக மாறிற்று என்ற மொழிநூலுண்மை சான்று. லத்தீனில் சகரம் இடைக்காலத்தே எழுந்தது. கன்னடத்தில் இன்றைக்கும் தமிழிலே சகரத்தோடு ஆரம்பிக்கின்ற பல சொற்கள் சகரமுதலுடையனவாய் நிற்கின்றன. இனி, கெம் - எலி, பகரம் வருவிக்கப்பெற்றுக் கெம்பெலி, கம்பலியாடு என வேறொருவகை ஆட்டுக்குப் பெயராயிற்று. இன்றைக்குக் கம்பளி எவ்வகை ஆட்டுமயிருக்கும் பொதுப் பெயர். "செங்கெருப்புனும் செவ்வெலிம் மயிர் அக்கெருப்பளவாய பொற் கம்பலம்" என்ற சீவகசிந்தாமணியுடையார்கூற்றையும் நோக்குக. பிற்காலம் எலிப்பெயர் வெள்ளைச் சிறுபிராணியாகிய எலிக்கும் வந்தது. வெள்ளெலி என்பதையும் காண்க. அதனால், கம்பளிப்போர்வையை எலிமயிர்ப்

போர்வை எனப் பகர்ந்த பழையநூல்கள் பிந்திய எலிக்கு இல்லாத மயிரை யே குறித்தன என மயங்குவாரும் உளர். அது நிற்க. ஆடு எனும் தற்காலப் பெயரும் எலியின் மருஉவே எனச் சொல்லக்கேட்பது வாசிப்போர்க்கு விநோதமாயிருக்கும். உண்மையில் எலிதான் எழ - கம், எட (தெலுங்கு), எரு (குறுக்), எறெ (மால்தோ), ஓட (கூயி), ஹோட் (பிராகூயி), எலு (சிங்களம்), யேடு (துளு), யாடு, ஆடு எனப் படிப்படியாய்த் திரிந்துவந்தது.

இனி, நமது ஆதி எலிச்சொல் இந்து - ஐரோப்பியபாஷைகளிலும் காணப்படுகின்றதா? சுமேரியம் எனும் மிகப் புராதனமொழியில் அது எலிம் (elim) என நின்றது. செமித்தியர் அதனை அயில் (ayil) என்றனர். கிரேக்கர் எல் - லொஸ், எல் - போஸ் (ellos, elophos) என மறிக்குப் பெயரிட, சர்மனியர் எலஹொ (elaho) என ஒருவகை மானைக் குறித்தனர். இங்கிலீஷில் எல்க் (elk) என்றதும் ஓரினத்துக்குப் பெயர். லத்தீனில் அல்செஸ் (alces), ஆறியெஸ் (aries), ஏடுஸ் (haedus) என்பது ஆட்டுக்கடா. ஸம்ஸ்கிருதத்தில் கம்பலஸ் (kambalas) இறுசியஸ் ((risiyas)என்பன மான்வகைகள். ஏலகஸ் எடகஸ், எடஸ் (elakas, edakas, edas) செம்மறியாட்டின் பெயர்கள். ஆட்டுக்குரிய பழைய எலிப்பெயர் கூயி எனும் தமிழ்ப் பாகதத்தில், ஓட என நிற்கும் என்றோம். இது, பழந்தமிழில் உடு எனப்பட்டது. காலச்செலவில் மருவிநின்ற இவ்வுருவம், சுமேரியத்திலும் உது, உஸ் (udu, uz) எனக் காணப்படுவது நமக்கு ஆச்சரியம் விளைக்கின்றது. இரு பாஷையாளரும் ஒருங்கு நெடுங்காலம் இருந்தமைக்கு இது ஒரு சான்றன்றோ?

ஆடாகிய எலிக்கு வெள்ளை எனவும் பெயர் என்றோம். ஐரோப்பிய பாஷைகளில் அதன் மயிரையும் ஆட்டுப்பெயராகிய வெள்ளை என்பதாற் குறித்து, லத்தீனில் வெல்லுஸ் (vellus), விலீன (lana for vlina) என்றும், கிரேக்கத்தில் லானொஸ் (lanos) என்றும், கொதிக்கத்தில் வுல்ல ஊலொஸ் (vulla, oulos) என்றும், லிதுவானியத்தில் உவில்ன (wilna) என்றும் ஸம்ஸ்கிருதத்தில் ஊர்ண (urna) என்றும், சர்மானியத்தில் வொல்ல (wolla) என்றும், இங்கிலீஷில் (wool) என்றும் சொல்லுவோராயினர். தமிழில் எலிமயிர், வெள்ளை என்ற பெயரீடு வழக்கற்று ஒழிய, கெம் - எலி ஆகிய செம்மலியின் பெயரால் கம்பலம் என்ற பெயர் ஒன்றே வழங்குகின்றது. ஆதிமக்கள் தோலாடையை அணிந்துவந்தபின் ஆட்டுமயிராடையை மேற்கொண்டகாலையிலும் ஒருங்கிருந்து, பின் பிரிந்துபோனமைக்கு இது ஒரு சான்று. அப்பால், பரதகண்டத்துக்குவந்து இடங்கொலியவர்கள் அங்கே பஞ்சைக்கண்டு அதனை உடைக்கு உபயோகப்படுத்தினர். பஞ்சுநூலாடைகள் கிழக்குத்திசையிலிருந்துதான் மேற்புலத்தாருக்குக் கிடைத்தன. இதனைப்பற்றிப் பின்னரும் சொல்லுவோம். [தொடரும்]